*பிரஸார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை*

*06 09 2025 SATURDAY 7.15 PM*

*ஆகாஷவாணி*

***தலைப்புச் செய்திகள்***

*1. உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் இந்தியா – பிரான்ஸ் நாடுகள் முக்கிய பங்கு வகிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*2. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் நடுத்தர மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.*

*3. நாடு முழுவதும் சிறப்பு வாக்காளர் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பரிசீலித்து வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

*4. குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் நாளை கனமுதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*5. தேசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் Yusha Nafees-ம், ருத்ரா சிங்கும் பட்டம் வென்றனர்.*

***இனி விரிவான செய்திகள்-***

*<<<<<>>>>>*

*உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் இந்தியா – பிரான்ஸ் நாடுகள் முக்கிய பங்கு வகிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுடன் தொலைபேசி வாயிலாக தாம் நடத்திய பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*யுக்ரைன் – ரஷ்யா இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டுவருவதற்காக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து தாங்கள் ஆலோசனை நடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*பாதுகாப்பு, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி போன்ற துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் அப்போது விவாதித்ததாக அவர் கூறியுள்ளார்.*

*அடுத்த ஆண்டு பிப்ரவரியில் இந்தியாவில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த உச்சிமாநாட்டில் பங்கேற்க வருமாறு பிரான்ஸ் அதிபருக்கு தாம் அப்போது அழைப்பு விடுத்ததாக பிரதமர் தெரிவித்துள்ளார்.*

*<<<<<>>>>>*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் நடுத்தர மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மேலும் 20 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்க உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கூறினார்.*

*சிக்கலான வரி விதிப்பு நடைமுறைகள் நடுத்தர மக்களுக்கு பெரும் சுமையாக இருந்தது என்றும், தற்போது அவை எளிமையாக்கப்பட்டுள்ளதையும் திரு அஷ்வினி வைஷ்ணவ் சுட்டிக்காட்டினார்.*

*<<<<<>>>>>*

நாட்டின் நலன் கருதி ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் தொடர்ந்து கொள்முதல் செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு பேட்டியளித்த அவர், கச்சா எண்ணெய் விலை மற்றும் போக்குவரத்து செலவுகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு, கொள்முதல் குறித்து முடிவு செய்யப்படுவதாக கூறினார்.

ஜிஎஸ்டி-யில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் மக்களிடையே நுகர்வை அதிகரிக்க உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வரி குறைப்பு நடவடிக்கை மூலதன செலவினத்தில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று அவர் கூறினார்.

ஏற்றுமதிக்கு அமெரிக்கா விதித்த கூடுதல் வரிவிதிப்பு காரணமாக ஏற்றுமதியாளர்கள் சந்தித்துவரும் பாதிப்புகளை குறைக்க அரசு முழு ஆதரவு அளிக்கும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி எதிர்கால தலைமுறையினருக்கு அடித்தளமாக அமையும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு புத்தொழில் நிறுவனங்கள் சிறந்த தளமாக அமையும் என்று கூறினார்.

புதிதாக தொழில் தொடங்குவது குறித்த ஆலோசனைகள் இளம் தொழில் முனைவோருக்கு உத்வேகம் அளித்திடும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டவும், உலக அளவில் புத்தொழில் மையமாக இந்தியாவை உருவாக்குவதிலும் இளைஞர்கள் பங்களிக்க வேண்டும் என்று திரு ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் சிறப்பு வாக்காளர் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பரிசீலித்து வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து விவாதிப்பதற்காக இம்மாதம் 10-ஆம் தேதி அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள் உடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த கூட்டத்தில் தலைமை தேர்தல் ஆணையர் திரு Gyanesh Kumar, தேர்தல் ஆணையர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

<<<<<>>>>>

குறைந்த மதிப்பிலான உரிமைக்கோரல் வழக்குகளில் தற்போதுள்ள நடைமுறைகளை மறுபரிசீலனை செய்வதற்கும், சீர்திருத்தங்களை பரிந்துரைப்பதற்கும் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

மத்திய பெரு நிறுவன விவகார அமைச்சகத்தின்கீழ் செயல்படும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம், இந்த குழுவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கை வழக்குகள் மீதான காலதாமதத்தை வெகுவாக குறைக்க உதவிடும்.

<<<<<>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை பொருட்களின் விலையை குறைக்க உதவிடும் என்று தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த ரப்பர் தோட்ட உரிமையாளர் திரு ராஜேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<>>>>>

*தமிழகத்தில் வனப்பரப்பை அதிகரிக்க பசுமை இயக்கம் திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.*

*சேலத்தில் நகர்ப்புற பசுமையாக்கல் திட்டத்தின்கீழ், மரக்கன்று நடும் திட்டத்தை அவர் தொடங்கிவைத்தார்.*

*இத்திட்டத்தின்கீழ், வேப்பம், புவின், புங்கை, நாவல், மூங்கில், தேக்கு உள்ளிட்ட 150-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் 18 ஆயிரத்து 250 சதுர அடி பரப்பளவில் நடப்பட்டுள்ளதாக கூறினார்.*

*தமிழகத்தை பசுமை மாநிலமாக மாற்றுவதற்கு வீடுகளை சுற்றியுள்ள காலி இடங்களில் மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிக்க வேண்டும் என்று திரு ராஜேந்திரன் வலியுறுத்தினார்.*

*<<<<<>>>>>*

*புதுச்சேரி சட்டப்பேரவையின் இரண்டாவது கட்ட கூட்டத்தொடர் இம்மாதம் 18-ஆம் தேதி தொடங்குகிறது.*

*இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், இந்த கூட்டத்தொடரின்போது வர்த்தகம் புரிதலை எளிமைப்படுத்தும் மசோதா மற்றும் இரண்டாவது ஜிஎஸ்டி திருத்த மசோதா விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.*
*கோப்புகளை கையாள்வதற்கான நடைமுறைகளில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் அதிகாரிகளுக்கு அபராதம் விதிப்பது குறித்த சட்டம் மத்திய அரசின் அனுமதி பெற்று இயற்றப்படும் என்று அவர் கூறினார்.*

*பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகளின் அமலாக்கம் குறித்தும் இந்த கூட்டத்தொடரில் விவாதிக்கப்பட உள்ளதாக திரு செல்வம் தெரிவித்தார்.*

*<<<<<>>>>>*

*குஜராத் மாநிலம் Pavagadh கோவில் தளத்தில் கட்டுமானப் பொருட்களை ஏற்றிச்சென்ற ரோப்-வே அறுந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.*

*Panchmahal மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற Pavagadh கோவிலில் நடைபெற்றுவரும் புனரமைப்புப் பணிகளுக்காக கட்டுமானப் பொருட்களை ஏற்றிச்சென்ற ரோப்-வே இன்று விபத்துக்குள்ளானதாக அம்மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*சம்பவம் நடந்த இடத்தில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இந்த விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

*<<<<<>>>>>*

*குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் நாளை கனமுதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மத்தியப்பிரதேசம், இமாச்சலப்பிரதேசம், கொங்கன் மற்றும் கோவா மாநிலங்களில் கடந்த 24 மணிநேரத்தில் அதிகனமழை பெய்துள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.*

*அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களின் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.*

*இமயமலையையொட்டிய பகுதிகள் மற்றும் சிக்கிம் மாநிலத்தில் அடுத்த ஏழு நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*இதனிடையே, கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், இமாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட*

*வடகிழக்கு மாநிலங்களில் நிலவும் சூழல் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி நேரில் ஆய்வு செய்ய உள்ளார்.*

*<<<<<>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*19 வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில், Yusha Nafees-ம், ருத்ரா சிங்கும் பட்டம் வென்றனர்.*

*ஜெய்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் Yusha Nafees –Rachit Shah-வை வென்றார்.*

*மகளிர் பிரிவில் ருத்ரா சிங் – Vyomika Khandelwal -லை வென்றார்.*

*-------------*

*சீனா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Niki Kaliyanda Poonacha – தாய்லாந்தின் Pruchya Isaro இணை பட்டம் வென்றது.*

*--------------*

*ஆசிய கோப்பை ஹாக்கி போட்டி ஆடவர் பிரிவில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.*

*பீகாரின் Rajgir -ல் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*

*---------*

*ஆசியக்கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா - ஜப்பான் இடையேயான ஆட்டம் சமன் ஆனது.*

*சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா மற்றும் சீனா தலா இரண்டு கோல் அடித்த நிலையில் ஆட்டம் ட்ராவில் முடிவடைந்தது.*

*---------------*

*புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆடடங்களில் பாட்னா – பெங்களுரு அணியையும், தமிழகம் – குஜராத் அணியையும் எதிர்கொள்கின்றன.*

*<<<<<END>>>>>*